# பதினெண் கீழ்கணக்கு அறநூல்களில் விழுமியங்கள்

*பா.ரேவதி*
சென்னை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7734

### முன்னுரை

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்களை பதினெண் கீழ்கணக்கு நூல்கள் ஆகும். அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையோ (அ) அவற்றில் ஒன்றையோ ஐந்து (அ) அதனினும் குறைந்த அடிகளால் ஆன வெண்பாயாப்பில் கூறுவனவையே கீழ்க்கணக்கு நூல்களாக அமைக்கப்படுகின்றன. குறிப்பாக ஓரடி,ஈரடி, நான்கடி என்று குறுகிய அளவில் நீதிக்கருத்துக்களை எடுத்துரைக்கும் போக்கு நீதி நூல்களில் காணப்படுகிறது. இதன் முக்கிய நோக்கமே சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே, அதன் அடிப்படையில் தோன்றியவையே பதினெண்கீழ்கணக்கு நூல்கள்.

### சங்ககால அற இலக்கியங்கள்

ஒருசில எல்லா இலக்கியங்களுமே அறநூல்கள் என்று கூறுப்படும் தன்மை வாய்ந்தவை என்றாலும் சில நூல்களை மட்டுமே அற இலக்கியங்கள் என்று பாகுபடுத்துகிறோம். காரணம் இவை நேராகவே அறிவுரை கூறும் முறையில் அமைந்துள்ளன. இலக்கண நூல்களாகிய தொல்காப்பியமும் பன்னிருபாட்டியல் போன்ற நூல்களும் அற இலக்கியம் தொடர்பான செய்திகளை எடுத்து கூறி உள்ளன. சங்க இலக்கியங்களும், சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்கணக்கு நூல்களின் தொகுப்பான 18 நூல்களுள் 11 நூல்களும் அறநூல்களாகவே காணப்படுகின்றன. ஜி யுபோப் பிற இந்திய மொழிகள் எல்லாவற்றையும்விட தமிழில்தான் அறநூல்கள் அதிகமாக இருக்கின்றன என்கிறார். திருக்குறன், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி போன்றவைகளேதமிழில் தொடக்கத்தில் வெளிவந்த அறஇலக்கியங்களின் முன்னோடிகள் என்று கூறலாம்.

### விழுமியங்கள் பொருள் விளக்கம்

இன்றைய காலத்திற்கு மிகவும் தேவையான ஒன்றாகவும், அவசியமாகவும் இருப்பது விழுமியங்கள் ஆகும். விழுமியங்கள் என்ற சொல்லினை நாம் பல்வேறு வடிவங்களில் பொருள் கொள்ள முடியும்.

ஏனெனில் விழுமியம் என்பது மனிதனது முழுமையான வாழ்க்கையாகும். விழுமியம் என்ற சொல்லிற்கு ஆங்கில அகராதியில் ஏயடரந என்ற சொற்பதத்தை பயன்படுத்தியுள்ளனர். மேலும் இதன் பொருள் 'மதிப்பு" ஆகும்.

விழுமியம் என்ற சொல்லிற்கு தமிழ் மொழியில் பல அர்த்தங்களுள்ளன. அதாவது சிறப்பு, உயர்வு, சீர்மை, நன்மை போன்ற கருத்துக்களை தெளிவுப்படுகின்றன. ஆகவே விழுமியம் என்பது ஒரு மனிதன் எவ்வாறு வாழவேண்டும்? எவ்வாறு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்? என்பதனைக் குறித்து நிற்கின்றது. மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்களின் அடிப்படையில் அமைந்தவகைகளே விழுமியங்கள் எனப்படுகின்றன.

**கல்வியின் சிறப்புகள்**

மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு நீர், உணவு, காற்று எவ்வளவு அவசியமான ஒன்றாக உள்ளதோ அதனைப் போன்றுதான் அறிவை வளர்ப்பதற்கு சரியானது எது? தவறானது எது? என்பதனை புரிந்து நடந்து கொள்வதற்கு கல்வி அவசியம். அதன் அடிப்படையில் அற இலக்கியங்கள் பல கல்வியின் சிறப்பினைப் பற்றி எடுத்து ரைக்கின்றன. ஒரு மனிதன் வாழ்வில் கண்ணாக இருப்பது கல்விதான்.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்புடைத்து**

***குறள்- 126 (பக்-27)***

என்கிறார் வள்ளுவர். ஒருதலைமுறை கல்வி கற்றால் அ:.து ஏழு தலைமுறைக்கும் பலனைத்தரும். அப்படிப்பட்ட கல்வியாக இருப்பின் சமுதாயமும் பயன்பெரும் என்று அறநெறிவழி அறிவுறுத்தியுள்ளார். மேலும்

**"பிச்சைபுக்காயினும் கற்றல் மிக இனிதே**
**நற்சுவையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே**
**மூத்தோர் முறுவலார் சொல்வினிது ஆங்கினிதே**
**தெற்றவும் மேலாயார்ச் சேர்வு"**

***இனிய.நா. (பா.(1) - பக். -8)***

புதஞ்சேந்தனார் பிச்சை எடுத்தாயினும் கல்வி கற்றல் மிகவும் இனிது. நல்ல அவையிலே கற்றவரைக் கண்டு கைகொடுத்தல், முத்து போன்ற புன்முறுவலரின் சொல், பெரியவர்களைச் சார்ந்து வாழ்வது இனியதும் இனியது என்று இனியவை நாற்பில் கூறுகிறார்.

கல்வியறிவுடையோர் அடக்கம் உடையவராக இருக்க வேண்டும், ஒருவர் அடக்கம் உடையவராக இருப்பதே அவருடைய நல்ல குணத்தினை எடுத்து காட்டுவதாக அமையும் என்று வள்ளுவர் அடக்கமுடைமை என்றொரு அதிகாரத்தை தனியே வைத்துள்ளார்.

**'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்"**

***(கு-121) பக் - 26.***

என்ற குரலில் தெளிவுப்படுத்தியுள்ளார். இத்தகைய மேன்மையை உண்டாக்கும் அடக்கம் கல்வியுடையோரிடம் இருக்க வேண்டும் என்றும் அப்படி இல்லையென்றால் அவர்கள் துன்பம் அடைவார்கள் என்பதை

**'ஆங்கின்னா**
**அடக்க அடக்காதார் சொல்.**

***(இன். நா-பா-41) பக்-35***

என்ற பாடலடிகளின் மூலம் கபிலர் எடுத்துரைக்கின்றார்.

**நூல்களை கற்கும் முறை**

கல்வி அறிவினை பெற்று இருந்தால் மட்டும் போதாது பல்வேறு வகையான நூல்களையும் கற்று தெரிந்திருக்க வேண்டும். மேலும் நூல்களை மேலோட்டமாகவும் கற்க கூடாது. ஆழ்ந்து கற்றலே கற்றவருக்கு சிறப்பினை ஏற்படுத்தும்.

**'கற்க கசடற கற்றவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

***(கு - 391) - பக் - 82***

திறம்பட நூல்களை கல்லாதவர்க்கு துன்பம் ஏற்படும் என்பதை

**'விழுத்தகு நூலும் விழையாதார்க்கின்னா"**

***(இன்.நா.பா-35) பக் -30***

என்ற பாடிலடியின் மூலம் சமுதாயத்தில் வாழும் மக்கள் நூல்களை விரும்பி கற்க வேண்டும் என்ற செய்தியை அறிய முடிகிறது. ஔவையாரும் நூல்பலகல் என்று குறிப்பிட்டுள்ள கருத்து இங்கு நோக்கதக்க ஒன்றாகும். மேலும்,

**"புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள் தெரியார்**
**உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும் - மற்றவற்றைப்**
**போற்றும் புலவரும் வேறே பொருள் தெரிந்து**
**தேற்கும் புலவரும் வேறு" -**

***(நாலடியார் - பா.எ.318) - பக்.136***

நூல்களை மிகுதியாக வாங்கி வந்து வீடு முழுவதும் சேர்ந்து வைத்து புசைபோட்டு போற்றிக் காக்கின்ற பொய்புலவர்கள் சிலர் உலகில் உள்ளனர். அதே சமயம் நூற்பொருளைப் புரிந்து பிறருக்கு எடுத்துச் சொல்லும் அறிவாற்றல் உடையவர்களே சிறந்த கல்வி ஞானத்தை உடையவர்கள் என்று சமண முனிவர்களும்சு ஏலாதியில் கூறியுள்ளனர்.

### கூடா நட்பின் செயல்

வாழ்வுக்கு இன்றியமையாதது நட்பு ஒன்றே ஆகும். நண்பர்களோடு பழகுவதும், பேசுவதும், வாழ்வதும், எவர்க்கும் மகிழ்ச்சியை அளிக்குமென்றும் அறிஞர்கள் கூறுவது உண்டு. எவருடனாவது நட்புக் கொள்ளுமுன், அவரைப் பற்றிப் புரிந்துகொள்ள வேண்டும். அவரை பற்றி நன்றாக தெரியவில்லை என்றால் அதுவே பகைமையை ஏற்படுத்திவிடும். நட்பின் சிறப்பினைப்பற்றி பல நூல்கள் கூறி இருந்தாலும் ஒரு சிலர் நட்பினை இழிவுபடுத்துபவர்களாகவே நடந்து கொள்கின்றனர். ஆகவே நட்பாராய்ந்து நட்பு கொள்ளுதல் நல்லது.

**'மருவுக மாசற்றார் கேண்மை யொன்றீத்தும்**
**ஒருவுக ஒப்பிலார் நட்பு"**

***(குற - 800) - பக் 163***

என்று வள்ளுவர் குறட்பாக்களில் குறிப்பிட்டுளார். இதனையே நல்லாதனார் திரிகடுகத்தில் கூறிஉள்ளார்.

**"பொய் வழங்கிவாழும் பொறியறையும் கைதிரிந்து**
**தாழ்விடத்து நேர் கருதும் தட்டையும் - ஊழினால்**
**ஒட்டி வினைநலம் பாரிப்பானும் இம்மூவர்**
**நட்கப்படாஅ தவர்"**

***(பாடல் - 15)***

பொய் பேசி வாழும் செல்வந்தன், தனக்கு மேலானவன் தாழ்ந்தபோது போற்றாதவன், விதியால் நண்பன் துன்பப்படும்போது பயனை எதிர் பார்ப்பவன் ஆகிய இம்மூவரும் யாராலும் நட்பு கொள்ளத்தகாதவராவார்கள் என்று கூறுகின்றார்.

### அறத்தின் செயல்

அறம் என்னும் சொல்லிற்கு ஒழுக்கம், வழக்கம், நீதி கடமை,ஈகை, புண்ணியம், கடவுள், சமயம் என்ற எட்டுவகையான பொருட்களால் அழைக்கலாம் என்று க.த.திருநாவுகரசு,திருக்குறள் நீதி இலக்கியம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில் உருவானவையே பதினெண் கீழ்கணக்கு அறநூல்கள் ஆகும். அறத்தின் செயல்பாட்டினை விளம்பி நாகனார் நான்மணிக்கடிகையில்

**"நிலத்துக்கணியென்பர் நெல்லும் கரும்பும்**
**குளத்துக் கணியென்பர் தாமரைப்பன்மை**
**நலத்துக் கணியென்பர் நாணம் தனக்கணி**
**தான் செல்லுலகத்தரம்"**

***(நா.ம.க. பா - 11) - பக் - 18***

நிலத்திற்கு அணியாகத்திகழ்பவை நெல்லும், கரும்பும், குளத்திற்கு அழகைத்தருவது தாமரைப்புவின் பன்மை, அதுபோல பெண்மைக்கு அழகைத் தருவ நாணமுடைமையாகும்.

ஒருவர் தான் செய்யும் அழகு எதுவென்றால் உலகத்திற்குத் துணையாக நின்று செய்யும் அறமே சிறந்த அறமாகும். மேலும் திருக்குறள்

**'அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை**
**மறந்தலின் ஊங்கில்லை கேடு"**

***(கு - 32) - பக் 08***

என்று வள்ளுவர் கூறும் அறம் எப்பொழுதும் எல்லாத்தலைமுறைக்கும் புரிந்து கொள்ளும் விதமாகவே படைக்கபபட்டிருக்கிறது. இதனைபோன்று கூடலூர் கிழார்

**"ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம்**
**புகழ்வெய் யோர்க்குப் பத்தேணா டெனிது"**

***(முது.மொ.கா.பா.எ.80) பக்.29***

முதுமொழிகாஞ்சி எளியபத்தில் புகழை விரும்பி அறஞ்செய்தாரைத்தேவர்கள் தாமே வந்து உபசரித்து அழைத்துப்போவர். எனவே அறம்செய்தார் சுவர்க்கம் புகுதல் எளிது என்று கூறியுள்ளார்.

**'புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின்**
**வலவனேவா வானவுர்தி**
**எய்துப வென்பதம் செய்வினை முடித்து"**

***(புற-பா-27) பக்-40***

என்ற புறநானூறு பாடலும் வலியுறுத்துகின்றது. மனிதர்கள் ஒவ்வொருவரும் சுகமான வாழ்க்கை வாழவேண்டுமென்று நினைத்தால் பல்வேறு செயல்களைச் செய்யும்போது ஏற்படும் முயற்சிகளில் துன்பம் ஏற்பட்டாலும் அதனை ஒரு பொருட்டாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்ட செயல் எதற்கு ஒப்பாக கருதப்படுகிறது என்றால் தோட்டிபோல் உழைத்து துரைபோல் சாப்பிடுவதற்கே ஒப்பாகும் என்று இராமாயணமும் நமக்கு எடுத்துரைக்கின்றது.

**'துன்புள தெனினன்றோ சுகம் உளது?"**

***(கம்.ரா பா.எ.1995)***

மேலும் ஒவ்வொரு அரசனும் குடிமக்களை தன் மக்களாக கருதி உண்மையாக நடந்து நீதிதவறாமல் இருப்பதே சிறந்த அறச்செயல்களுள் ஒன்றாக கருதப்படும். அறத்தின்வழி நடந்துகொள்ளும் தன்மை எப்படிப்பட்டது என்றால்

**"கன்றி முதிர்ந்த கழியப்பன்னான் செயினும்**
**குன்றின் மேல் இட்ட விளக்கு"**

***(ப.மொ.நா.359) பக் 369***

குன்றின் மேல் இட்ட விளக்குப்போல் விளங்கும் என்று பழமொழி நானூறு எழுதிய முன்றுரை அரையனார் தன் பாடலின் வழி வலியுறுத்துகின்றார்.

## நோயில்லா மருந்து

ஆசாரக் கோவையின் ஆசிரியர் கயத்துர் பெருவாயில் முள்ளியார் தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டுவகையான வனப்பில் இந்நூல் 'அம்மை" என்பதில் அடங்குவதாகும். ஆரிடம் என்னும் வட நூலின் வழி நூலே ஆசாரக் கோவையாகும். இது பல்வேறு வகையான மனிதநெறிகளை எடுத்து ரைக்கின்றது.

**'பாழ் மனையும், தேவகுலனும் சுடுகாடும்**
**ஊரில் வழியெழுந்த ஒற்றைமுதுமானும்,**
**தாமே தமியர் புகாஅர், பகல் வளரார்,**
**நோயின்மை வேண்டுபவர்'**

***(ஆ.கோ.பா - 57) பக். 58***

மனிதன் குடியில்லாத வீட்டிலும், கோயிலினுள்ளும், சுடுகாட்டினுள்ளும் ஊரில்லாத இடத்தில் உள்ள பழைய மரத்தினிடத்துக்கு தனி ஒருவனாக எந்த வகையான துணையும் இன்றி தனியே செல்லக்கூடாது. அதேபோல் பகலில் தூங்கக்கூடாது. இவையெல்லாவற்றையும் செய்தோம் என்றால் ஆரோக்கியம் இல்லாமல் உடம்பில் அடிக்கடி நோய் ஏற்பட்டு கொண்டே இருக்கும் என்று ஆசாரக்கோவை நூல் கூறுகின்றது. மேலும், இல்லறத்தைப் பற்றியும் வீடுபேறு அடையும் துறவறத்தைப் பற்றியும் கணி மேதாவியார் அழகாக பல பாடல்களில் இயற்றியுள்ளார் என்று சிறப்புப்பாயிரம் கூறுகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது தமிழ் முதுமொழி,

இளமை போகாது, பிணி அண்டாது, மூப்பு வராது, சாவு நிகழாது என்று சொல்ல முடியுமா என்றால் அது இயலாது, அது மனித வாழ்க்கைக்கே உரிய இயற்கை நீதி ஆயினும் உடம்பைப் பேணினால் உயிரை நீண்டநாள் காக்கலாம். நோய் நொடியின்றி வாழ உடலை வலிமையாக்க உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்பதை

**'எடுத்தல் முடக்கல் நிமிர்த்தல் நிலையே**
**படுத்தலோடு ஆடல்பகரின் - அடுத்து உயிர்**
**ஆறுதொழில் என்று அறைந்தார் உயர்ந்தவர்**
**வேறு தொழிலாய் விரித்து"**

***(ஏ.பா 69)***

கையை நிலத்திலே ஊன்றி உடலை மேலே தூக்கும் தண்டால், கைகால்களை முடக்கி இருத்தலாகிய ஆசனம், நிமிர்ந்து நிற்றல், தலைகீழாக நிற்றல், படுத்துக் கொண்டு செய்யும் பயிற்சி, குதித்தல் போன்ற பயிற்சிகளை முறைபட செய்து வந்தாலே உடல் உறுதியடைந்து வலிமை பெறும் என்கிறார். ஏலாதி ஆசிரியர், அதன்வழி நாமும் உடலினை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டோம் என்றால் உடலில் எந்தவகையான புதிய நோய்கள் வராமல் தடுக்கமுடியும்.

## வேளாண்மை சிறப்பு

உழவர்களின் வாழ்க்கையை மையப்படுத்தி உருவானதே வேளாண்மை எனலாம். உழவர்களின் தொண்டைப் போன்று தான் தேசத்தொண்டும் சிறப்புடையது. சிறுபஞ்சமூலம், பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று ஆகும். காரியாசான் கண்டங்கத்தரி, சிறுவழுதுளை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி முதலிய ஐந்து பொருள்களின் கலவை என்கிறார். இம்மருந்துகள் மக்களின் உடல் நோயைப் போக்குவதுபோல், மக்கள் மனதைச் சுத்தம் செய்யக்கூடியஐந்துஉறுதிப்பொருள்களைக் கொண்டு திகழ்கின்றன.

**'வார்சான்ற கூந்தல் 'வரம்பு உயர' வைகலும்**
**...... ...... ..... .....**
**கோ உயரும்**
**ஓவாது உரைக்கும் உலது"-**

***(சிறு.ப.மூ பா-44)***

ஒரு நாட்டில் வேளாண்தொழில் ஓங்கி இருக்க வேண்டுமென்றால் நிலத்திலே நீர் தங்கும் படியாகக்கரை உயர்ந்திருக்க வேண்டும் கரை உயர்ந்து காணப்பட்டால்தான் குளத்திலும் நீர் தங்கியிருக்கும் வேளாண்மையால் பயிர் செய்ய முடியும். நெற்பயிர் ஓங்கி செழித்து வளர்ந்தால் தான் குடிமக்கள்யாவரும், பஞ்சம், பசியின்றிப் பல செல்வத்தினை பெற்று செழுமையுடன் வாழ்ந்தால் அந்நாட்டு மன்னன் மக்களால் மதிக்கப்படுவான். மரங்கள் வளர்ப்பு பற்றி பழந்தமிழ் இலக்கியங்களிலே சொல்லப்பட்டுள்ளன. அக்காலத்தில் ஒரு குழந்தை பிறந்தால் ஒருமரம் வளர்க்கும் வழக்கமும் இருந்துவந்ததாக கூறப்படுகிறது. உழவர்கள் எருதுகளை வைத்துதான் உழவுத்தொழிலைச் செய்ய வேண்டியமுறை இருக்கிறது.

**'எருதில் உழவர்க்கு போ(கு) ஈரம் இன்னா"**

***(இன்.நா.பா.5) பக்.5***

சில சமயங்களில் முளைக்காமல் இருக்கும் நிலை உழவர்க்கு துன்பத்தை ஏற்படுத்தும் இந்நிலை இக்காலத்திலும் இருந்து கொண்டு வருகிறது என்பதனை

**'நிலத்திட்ட நல்வித்து நாறாமையின்னா"**

***(இன்.நா.பா.20) பக்.20***

இன்னா நாற்பதை எழுதிய கபிலர் பாடலின் வழி கூறிஉள்ளார். ஆகவே வேளாண்மைதான் நம் நாட்டின் உயிர்நாடி என்று கூறலாம்.

## ஈகைசெயல்

பிறருக்கு கொடுத்து உதவும் தன்மையே ஈகை எனப்படுகிறது. மனதார மற்றொருவருக்கு கொடுத்து உதவும் தன்மை உடையவர்கள் எல்லோராலும் போற்றுதலுக்கு உரியவர்களாவார்கள். வள்ளுவர் ஈகையின் செயலினை கூறுகையில்

**'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகைமற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து"**

***(குற - 221)***

என்ற குறளின் வழி அறியலாம். மேலும் இன்னா நாற்பதில் பல்வேறு இடங்களில் ஈகையின் சிறப்பினை எடுத்துகூறி உள்ளார்.

**'கொடுக்கும் பொருளில்லான் வள்ளண்மையின்னா"**

***(இ.நா.40) பக்-34***

**'பொருளில்லா வண்மைபுரிவு"**

***(இ.நா.பா-.10:3-4)பக்-10***

என்ற பாடலடிகள் கைப்பொருள் இல்லாதவர்களால் செய்யும் ஈகை துன்பம் கொடுக்கும் அளவில் வாங்குபவர்களும் மகிழ்ச்சி அடைய வேண்டும். அதே சமயம் யாரிடம் பரிசில் பெறவேண்டும் என்றும், அருள் இல்லாதவரிடம் பொருளை வாங்ககூடாது என்று இன்னா நாற்பதின் மூலம் அறியமுடிகின்றன. மேலும் நான்கு அடிகளை உடைய நாலடியார் ஈகையின் செயலினை கூறுகையில்

***'இம்மி அரிசித் துணையானும் வைகலும்***
***நும்மில் இயைவ கொடுத்துண்மின் உம்மைக்***
***கோடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்(து)***
***ஆடாஅ அடுப்பினவர்"***

***(நா.பா.- 24) பக்-23***

நம் இல்லம் தேடி வருவோர்க்கு நாள் தோரும் இம்மி அரிசி அளவாவது கொடுத்து உண்ணுதல் வேண்டும். இல்லையென்றால் கடல்சார்ந்த இவ்வுலகில் சமைக்காத அடுப்புடைய ஏழையாகவும், கருமிகள் என்று இழிவாகச் சொல்லும் அளவுக்கு ஆளாகிவிட கூடாது என்று ஈகையின் சிறப்பினை பற்றி பல பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

## முடிவுரை

விழுமியங்கள் வழியே வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும்போது வாழ்வு சிறப்பானதாக அமையும், ஒரு சமூக மதிப்பீடாக விழுமியங்கள் என்பது தனிநபர் சமூகம் வாழ்க்கை என்பவற்றை வெளிப்படுத்துகின்றன. இப்படி தான் வாழ வேண்டும் என்பதனை விட சமூக நீதிக்காக ஒருவருடைய வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு விழுமியங்கள் கற்றுத்தருகின்றன. வாழ்வியலில் பின்பற்றக்கூடிய பொய்யாமை, நட்பு, வேளாண்மை, ஈகை, புலால் உண்ணாமை, கல்வி போன்ற பல அறக்கருத்துக்களை மிகவும் நயமாக எடுத்துரைக்கும் நூல்களாக பதினெண் கீழ்கணக்கு அறநூல்கள் முக்கிய இடத்தை பெறுகின்றன. அதேபோன்று அறக்கருத்து க்களை நிறைந்த செயல்களை மனித சமுதாயமும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

## துணை நூல்கள்


1. ட. செல்வகேசவராய முதலியார்,பதிவு 1923 ஆசாரக்கோவை அச்சு : டியோசிசன் அச்சகம் வேப்பேரி சென்னை.
2. ந மு வேங்கடசாமி நாட்டார் (2.ஆ). இன்னா நாற்பது பதிப்பகம்தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த ஓர்க்ஸ் சென்னை டிசம்பர் 1924
3. சுந்தர சண்முகனார் (2. ஆ). இனியவை நாற்பதுஜூன் 1987 பதிப்பகம், புதுவைப்பைந்தமிழ் புதுச்சேரி 605 011
4. கௌமாரீஸ்வரி (ப ஆ) மு. ப, 2007, ஏலாதி மூலமும் உரையும் சாரதா பதிப்பகம், சென்னை.
5. ரா ஸ்ரீனிவாசன் (பே. ஆ) மூ.ப 2000 கம்பராமாயணம் பதிப்பு அணியகம் செனாய் நகர் சென்னை.
6. தமிழ்ப்பிரியன் சிறுபஞ்சமூலமும் உரையும் (2 ஆ) ஆண்டு - 2007 பதிப்பு கற்பகம் புத்தகலாயம் சென்னை
7. புலவர் சுந்தர சண்முகனார் (2 ஆ) 48 ஆவது வெளி 1970 நாலடியார் நயவுரை பதிப்பு - புதுவைப்பைந்தமிழ் புதுச்சேரி
8. வே.இரா.மாதவன் (ப.ஆ.) மு.ப 2001 நான்மணிக்கடிகை, மூலமும் பழைய உரையும், ஸ்டுடென்ட்ஸ் செராக்ஸ் சென்டர் தஞ்சாவூர்

9. டீ. செல்வகேசவராய முதலியார், பதிவு 1929 பழமொழி நாநூறு அச்சு: டியோசிசன் அச்சகம் வேப்பேரி சென்னை.
10. புலியூர் கேசிகன் (2 ஆ ) மு.ப டிசம்பர் 2010 புறநாநூறு மூலமும் உரையும் சாரதா பதிப்பகம், சென்னை.
11. டீ. செல்வகேசவராய முதலியார், பதிவு 1919 முதுமொழிகாஞ்சி அச்சு: 5 பி சி கே அச்சகம் சென்னை.
12. அ.நாராயணசரணர், மு.ப. 1917 திரிகடுகம்பதிப்புஸ்ரீவித்யாவினோதினி தஞ்சை
13. இரா கஸ்தூரிராஜா, மு.ப, - நவம்பர் 2012 (2 ஆ) திருக்குறள், பதிப்பு கவிக்குயில் சென்னை
14. முனைவர் பா.ரேவதி 28, முதல் தளம் 7ஆவது தெரு, நாகப்பா நகர் குரோம்பேட்டை, சென்னை